செய்தி வெளியீடு எண் : 986 நாள் : 17.07.2024

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு நாள் விழா ஒவ்வொரு ஆண்டும் சூலை 18 அன்று கொண்டாடப்பட வேண்டும் என்ற ஆணைக்கிணங்க இவ்வாண்டு சூலை 18 தமிழ்நாடு நாள் விழா பேரறிஞர் அண்ணா பிறந்த மண்ணான காஞ்சிபுரத்தில் ஏ.கே.ஜி திருமண மாளிகையில் வியாழக்கிழமை 18.07.2024 நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஒளவை அருள் அவர்கள் வரவேற்புரையும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் விழாச் சிறப்புரையும் ஆற்ற உள்ளனர்.

திரு. ஆழி.செந்தில்நாதன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. "தமிழ்நாடு வாழ்வும் வரலாறும்" என்ற தலைப்பில் முனைவர் பர்வீன் சுல்தானா அவர்களும், "சென்னை மாகாணமும் செயற்கரிய போராட்டங்களும்" என்ற தலைப்பில் செல்வன் சிவ.சதீஷ் அவர்களும், "சென்னை மீட்பும் வரலாறும்" என்ற தலைப்பில் திருமதி. அனு கிரகா அவர்களும், "திராவிட இயக்கத் தலைவர்களும் நவீன தமிழ்நாடும்" என்ற தலைப்பில் திரு. சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், "தமிழ்நாடு பெயர்மாற்றப் போராட்ட வரலாறு" என்ற தலைப்பில் செல்வன் மா.மதன் குமார் அவர்களும் கருத்துரையாற்ற உள்ளனர்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில

அளவில் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் கோ.தீபஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.50,000/-ம் காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திருவள்ளூர் மாவட்டம் ம.ஜெயஜனனி என்ற மாணவிக்கு ரூ.30,000/-ம் காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டம் மு.வீரமணிகண்டன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/-ம் காசோலை, பாராட்டுச் சான்றிதழும் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற திருவாரூர் மாவட்டம் ச.கௌ.பாவேஷ் பிரசன்னா என்ற மாணவனுக்கு ரூ.50,000/-ம் காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டம் அ.அப்துல் ஹக்கீம் என்ற மாணவனுக்கு ரூ.30,000/-ம் காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் நா.ரிஸ்வானா பர்வின் என்ற மாணவிக்கு ரூ.20,000/-ம் காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கி விழாப் பேருரையாற்றுவார்.

இவ்விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை திரு. ஆ.மனோகரன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் மாநகராட்சி துணைமேயர் திருமதி நித்தியா சுகுமார், காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி மலர்க்கொடி குமார், காஞ்சிபுரம் ஒன்றிய குழு துணைத்தலைவர் திருமதி திவ்வியப்பிரியா இளமது ஆகியோர் வாழ்த்துரையும், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி க.பவானி நன்றியுரையும் வழங்கவுள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu